WWW.ASKNETWORK.NET

Tamil

/INTRODUCING ASK NETWORK/

எல்லா தேசங்களுக்காகவும் ஜெபிக்க, எல்லா தலைமுறையினரையும் ஒன்றாகக் கூட்டி, தேவனால் மட்டுமே செய்யக்கூடிய காரியங்களைச் செய்யும்படி அவரிடம் கேட்டு, அவர் நம்மிடம் கேட்பவற்றைச் செய்தல்

இந்த அட்டையின் முன்பக்கத்தில் உள்ள தரிசன அறிக்கை , இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசிக்கிற அனைவரும், சபைக்காகவும், சமுதாயங்களுக்காகவும், தேசங்களுக்காகவும் ஜெபிக்கும்படி விடுக்கப்படும் ஓர் அழைப்பு.



எல்லோருக்காகவும் கேட்கும்படி தேவன் நம் எல்லோரையும் அழைக்கிறார்.

ஆஸ்க் வலையமைப்பிற்கு தேவன் கொடுத்துள்ள விசேஷமான அழைப்பு:

தேவனை ஆராதித்தல்
தேவனுக்குச் செவிகொடுத்தல்
தேவ வார்த்தையின்படி கேட்டல்
தேவனுக்குக் கீழ்ப்படிதல்
தேவனுக்கு நன்றி செலுத்துதல்

ஒன்றுகூடத் தீர்மானிக்கிறோம்

முதலாவது அவரிடத்திலும், முடிந்தபோதெல்லாம் பிறரோடும் கூடி வருகிறோம். ஏசாயா 55:6; மத்தேயு 18:18–20 உங்களோடு சேர்ந்து கேட்க மற்றவர்களையும் அழையுங்கள்!

கேட்கத் தீர்மானிக்கிறோம்

உபவாசத்தோடு தம் வார்த்தையை வைத்து ஜெபித்து, தம்முடன் பங்காளராகும்படி தேவன் நம்மைத் தாழ்மையுடன் அழைக்கிறார். ஆஸ்க் வலையமைப்பு உலகெங்கும் அவருடைய ராஜ்யத்தின் நோக்கங்களை நிறைவேற்றி வருகிறது. மத்தேயு 7:7–8; யோவான் 15:7–8

இதனை நாங்கள் இரு வழிகளில் நிறைவேற்றுகிறோம்:

போதனைக்கான உபகரணங்கள், ஜெப உதவிகள் மற்றும் கூடுகைகள் மூலம் தேவனுடைய மக்களை ஆயத்தப்படுத்துகிறோம். (www.ASKnetwork.net என்ற வலைதளத்தைப் பார்க்கவும்.) தேவனுடைய சித்தத்தின்படி அதிகாரத்தோடு ஜெபிக்க விரும்புகிற எவரும், தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவரின் மூலமாகவும் பலப்படுத்தப்படுகிறார்கள். எபேசியர் 6:17–18; எபிரெயர் 4:12–13

எல்லா தேசங்களிலும் உள்ள கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு இணைந்து செயல்படுதல். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப் பலப்படுத்துவதற்காக சபைகளுடனும் ஊழியங்களுடனும் இணைந்து செயல்படுவது அவசியமானது; அது தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்கு உதவியாகவும், கர்த்தருக்குப் பிரியமானதாயும் இருக்கிறது. சங்கீதம் 133

கீழ்ப்படிந்து, நீதியோடு வாழத் தீர்மானித்திருக்கும் நாம் கேட்பதை அருளிச் செய்யும் தேவனுக்கு நன்றி.

“அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.”
(1 யோவான் 3:22)